காலண்டு மாதிரி வினாத்தாள் 2019
ஒன்பதாம் வகுப்பு
சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண்கள் : 100 காலம் அளவு : 15 நிமிடம் + 2 1//2, மணி

**பகுதி I**

(1) இப்பகுதியில் உள்ள அனைத்து 14 வினாக்களுக்கும் விடையளிக்கவும்
(2) விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

**I.சரியான விடையைத் தேர்ந்தெடு. 14X1=14**

1. பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ____________ ஆவர்.
   அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ் இ) மனிதன் ஈ)நியாண்டர்தால்
2. எகிப்தியர்கள் இறந்த உடல்களைப் பதப்படுத்தி பாதுகாத்த முறை ___________.
   அ) சர்கோபகஸ் ஆ) ஹைக்சோஸ் இ) மம்மியாக்கம் ஈ) பல கடவுளர்களை வணங்குதல்
3. சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது?
   அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ்-பிராமி ஈ) கிரந்தம்
4. சேரர்களை பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு எது.?
   அ) புகளூர் ஆ) கிர்நார் இ) புலிமான்கோம்பை ஈ) மதுரை
5. மும்மணிகள் (திரி ரத்னா) என்ற மூன்று கொள்கைகளை போதித்தவர் __________.
   அ) புத்தர் ஆ) மகாவீரர் இ) லாவோட்சே ஈ) கன்ஃபூசியஸ்
6. மௌரிய ஆட்சி அமைப்பு மற்றும் சமூகம் குறித்த செய்திகளைத் தன் குறிப்புகளால் அளித்தவர்
   அ) மார்க்கோ போலோ ஆ) ஃபாஹியான் இ) மெகஸ்தனிஸ் ஈ) செல்யூகஸ்
7. புவியினுள் உருகிய இரும்பைக் கொண்ட அடுக்கை __________என்று அழைக்கின்றோம்.
   அ) கருவம் ஆ) வெளிக்கரு இ) கவசம் ஈ) மேலோடு.
8. பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தியா _______ கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது
   அ) கோண்டுவானா ஆ) லொரேசியா இ) பாந்தலாசா ஈ) பாஞ்சியா
9. பாறைகளின் சிதைவுறுதலும் அழிதலும் ____________ என்று அழைக்கப்படுகிறது?
   அ) வானிலைச் சிதைவு ஆ) அரித்தல் இ) கடத்துதல் ஈ) படியவைத்தல்
10. கடல் தூண்கள் உருவாவதற்குக் காரணம் _________________?
   அ) கடல்அலை அரித்தல் ஆ) ஆற்றுநீர் அரித்தல் இ) பனியாறு அரித்தல் ஈ) காற்றின் படியவைத்தல்
11. ________________ புயலின் கண் என்று அழைக்கப்படுகிறது
   அ) அழுத்தம் ஆ) காற்று இ) சூறாவளி ஈ) பனி
12. ஆபிரகாம் லிங்கன் __________ நாட்டின் ஜனாதிபதியாக இருந்தார்
   அ) அமெரிக்க ஐக்கிய நாடுகள் ஆ) இங்கிலாந்து இ) சோவியத் ரஷ்யா ஈ) இந்தியா
13. இந்திய தேர்தல் ஆணையம் ஒரு
   அ) சுதந்திரமான அமைப்பு ஆ) சட்டபூர்வ அமைப்பு இ) தனியார் அமைப்பு ஈ) பொது நிறுவனம்
14. கூற்று (A) : ஒழுங்குபடுத்தப்படாத துறையின் பொருளாதார பண்பு என்பது வீட்டினுள் உற்பத்தி நடவடிக்கை மற்றும் சிறுதொழில் செய்வதாகும். காரணம் (R) : இங்கு குறைவான ஊதியமும் மற்றும் வேலைகள் முறையாக வழங்கப்படுவதில்லை.

அ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரிஇ கூற்றுக்கான காரணம் சரி
ஆ) கூற்று (A) மற்றும் காரணம் (R) சரிஇ கூற்றுக்கான காரணம் தவறு
இ) கூற்று (A) சரி காரணம் (R) தவறு ஈ) கூற்று (A) தவறு காரணம் (R) சரி

பகுதி II (மதிப்பெண்கள் : 20) 10X2=20
எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
28 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்

15. நியாண்டர்தால்களின் தனித்தன்மை வாய்ந்த பண்புகளைக் கூறு
16. பெருங்கற்காலத்தில் இறந்தோரைப் புதைக்கும் வழக்கத்தின் வகைகளைக் கூறு.
17. சிகுரட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக?
18. அயல் நாடுகளுடனான தொடர்பு பழங்காலத் தமிழகத்துக்குப் பெருமை சேர்த்தது — இதற்கான சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.
19. கலிங்கா கல்வெட்டுக் குறிப்பு கூறுவது என்ன
20. புத்த சமயத்தைப் பரப்ப அசோகர் மேற்கொண்ட முயற்சிகள் என்னென்ன?
21. புவியின் நான்கு கோளங்களைப் பற்றி சுருக்கமாக எழுதுக?
22. புவிஅதிர்ச்சி என்றால் என்ன? அவை எவ்வாறு உருவாகின்றன?
23. வானிலைச்சிதைவு — வரையறு
24. வளிமண்டலம் - வரையறு?
25. அழுத்தக் குழுக்கள் என்றால் என்ன
26. இந்தியாவிலுள்ள தேர்தல் முறைப் பற்றி விவரி?
27. பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை
28. ஆப்ரகாம் லிங்கனின் மக்களாட்சிக்கான வரையறையை கூறுக?

பகுதி III (மதிப்பெண்கள் : 50) 10X5=50
எவையேனும் 10 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.
42 வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும்

**29. கோடிட்ட இடங்களை நிரப்புக**

i. பொதுத்துறை என்பது ________

ii. இந்தியாவில் ___________ கட்சி முறை பின்பற்றப்படுகிறது

iii. இந்திய அரசியலமைப்பு இறுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆண்டு ________

iv. மௌரியப் பேரரசைப் பற்றியும் குறிப்பாக அசோகரின் தர்மம் சார்ந்த ஆட்சியைப் பற்றியும் அறிந்து கொள்ள ______________ பாறைக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன

v. ____________ என்பது மனிதத் தலையும் சிங்க உடலும் கொண்ட, கல்லால் ஆன மிகப் பெரிய உருவம் ஆகும்.

**30. பொருத்துக**

i. . பழங்கால மானுடவியல் - சங்க காலத் துறைமுகம்

ii. பாரோ - தூய மனநிலையை அடைவதற்கான பாதை

iii. பெருங்குளம் - மனிதஇன முன்னோர்கள் குறித்த ஆய்வு
iv. அரிக்கமேடு - எகிப்திய அரசர்
v. எண் வழிப்பாதை - மொகஞ்சதாரோ

**31. பொருத்துக**

i. கவசம் - அர்த்தசாஸ்திரம்
ii. வானிலையியல் - ஏழு
iii. பெண் குதிரை வால் - சிமா
iv. சாணக்கியர் - வானிலை பற்றிய படிப்பு
v. தேசியக் கட்சி - கீற்று மேகம்

**32. வேறுபடுத்துக**

I ) வானிலை மற்றும் காலநிலை
ii ) இயற்பியல் சிதைவு மற்றும் இராசயனச் சிதைவு.

**காரணம் கூறுக** iii ) புவி மேலோடு, கவசத்தின் மீது மிதக்கின்றது

33. தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்தளவிலானது என்பதைக் கூறு
34. சங்க காலத்தில் தொழில்களும் கைவினைக் கலைகளும் பொருளாதாரத்தை மேம்படுத்தின
35. சமண, புத்த சமயக் கொள்கைகளுக்கு இடையேயான ஒற்றுமை வேறுபாடுகளையும் எழுதுக.
36. புவி அமைப்பை விவரி
37. வானிலை சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக
38. வளிமண்டலத்தின் அமைப்பைப் பற்றி ஒரு பத்தியில் எழுதுக?
39. மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை? விவரி.
40. பொதுத் துறையையும், தனியார் துறையையும் வேறுபடுத்துக..
41. காலக்கோடு வரைக

i. ஏறத்தாழ பொ.ஆ.மு. 1300 முதல் பொ.ஆ.மு.300 வரை
ii. ஏறத்தாழ பொ.ஆ.மு. 300 முதல் பொ.ஆ. 300 வரை.
iii. பொ.ஆ. முதல் நூற்றாண்டு iv. பொ.ஆ. இரண்டாம் நூற்றாண்டு
v. ஏறத்தாழ பொ.ஆ. 300 முதல் பொ.ஆ. 500 வரை.

42. 1. விவரி. அ) முதன்மைத் துறை ஆ) இரண்டாம் துறை இ) சார்புத் துறை

**பகுதி IV** (மதிப்பெண்கள் : 16) 2X8=16
2 வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

43. **i) ஹோமினிட் மற்றும் ஹோமினின்ஸ்**

அ) ஹோமினிட் குறித்து என்போர் யாவர்?

ஆ)ஆப்பிரிக்காவில் கருவிகளை உருவாக்கிய முதல் மனித இனம் எது?

இ) நவீன கால மனிதர்கள் எந்தப் பெயரால் குறிக்கப்படுகிறார்கள்?

ஈ) இந்த இனத்தைச் சேர்ந்த ஏதேனும் ஒரு வகையைக் கூறு.

**ii. இந்தியத் தொழில்துறைகள் மற்றும் சங்க காலக் கைவினைகள்**

அ) நகர மயமாக்கத்தின் முக்கியமான கூறுகளைக் கூறுக.

ஆ) மட்கலம் செய்பவருக்கான இன்னொரு தமிழ் பெயர் என்ன?

இ) பானை செய்தலின் வெவ்வேறு வகைகள் யாவை?

ஈ) விவசாயத்திலும் போரிலும் இரும்பின் பயன்பாடுகள் என்ன?

**(அல்லது)**

. **i) எகிப்திய நாகரிகத்தின் பண்புகள்**

அ) பிரமிடுகளை யார் கட்டினார்கள்? ஏன் கட்டினார்கள்?

ஆ) மம்மி உருவாக்க முறையைக் கூறு.

இ) பழங்கால எகிப்தியர்களின் நம்பிக்கைகளைப் பற்றிக் கூறு.

ஈ) பெரிய ஸ்பிங்ஸின் முக்கியத்துவத்தைக் கூறு

**ii) கௌதம புத்தர்**

அ) புத்தரின் இயற்பெயர் என்ன?

ஆ) புத்தர் பிறந்த ஊர் என்ன?

இ) அவருக்கு எங்கே ஞானோதயம் ஏற்பட்டது?

ஈ) புத்தர் முதல் போதனையை எங்கு நிகழ்த்தினார்?

44. உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றை குறிக்கவும்

அ). பசிபிக் நெருப்பு வளையம்

ஆ) புவி அதிர்ச்சி மண்டலம் (ஏதேனும் இரண்டு)

இ) செயல்படும் எரிமலைகள் (இரண்டு)

ஈ) இமயமலை மற்றும் ஆல்ப்ஸ் மலைத்தொடர்கள்

உ) கி ழக் கு ஆப்பிரிக ◌ாவி ன் பிளவுப்பள்ளத்தாக்கு

**(அல்லது)**

உலக வரைபடத்தில் கீழ்க்கண்டவற்றைக் குறிக்கவும்

1. ஏதேனும் இரண்டு டெல்டாக்கள்.
2. அமெரிக்காவின் நியூயார்க்கில் உள்ள சுண்ணாம்புப் பிரதேச பகுதி.
3. உலகில் காணப்படும் ஏதேனும் இரண்டு வெப்ப மற்றும் குளிர் பாலைவனங்களைக் குறிக்கவும்.
4. கண்டப்பனியாறு காணப்படும் ஏதேனும் ஒரு பகுதி